**சுருக்கம்**

வேளாண்மை - உழவர் நலத் துறை - "பாரம்பரிய நெல் இரகங்களை பாதுகாத்துப் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவித்திடும் விதமாக, பாரம்பரிய முறையில் நெல் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்று, மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெறும் விவசாயிகளுக்கு "பாரத ரத்னா" டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது" வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.4) துறை**

**அரசாணை (நிலை) எண். 304** **நாள் :27.12.2022**

திருவள்ளுவர் ஆண்டு, 2053
சுபகிருது வருடம், மார்கழி 12-ஆம் நாள்
**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண். 235, வேளாண்மை (வேஉ4) துறை, நாள். 24.09.2018.
2. அரசாணை (2டி) எண். 172, வேளாண்மை (வேஉ4) துறை, நாள். 06.10.2020.
3. அரசாணை (நிலை) எண். 214, வேளாண்மை (வேஉ.4) துறை, நாள். 29.11.2021.
4. அரசாணை (நிலை) எண். 144, வேளாண்மை மற்றும் உழவர் நலத் (வேஉ4) துறை, நாள்.13.10.2021.
5. வேளாண்மை இயக்குநர் கடித எண்.வேதபி3/84854/2022, நாள் 05.08.2022.

*****

**ஆணை :**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் "பாரம்பரிய நெல் இரகங்களை பாதுகாத்துப் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவித்திடும் விதமாக, பாரம்பரிய முறையில் நெல் சாகுபடி செய்து, அதிக மகசூல் பெற்று, மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெறும் விவசாயிகளுக்கு "பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதும்", ரொக்க தொகையாக முறையே ரூ.1.00 லட்சம், ரூ.75 ஆயிரம் மற்றும் ரூ.50 ஆயிரம் வழங்கப்படும் என்ற ஆணையும், அதனை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவது மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் 2020 – 2021 – ஆம் ஆண்டிற்கான பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதுக்கான பயிர் விளைச்சல் போட்டியினை நடத்துவதற்கு முறையே ரூ.2,30,000/-க்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பும், தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று விவசாயிகளுக்கு பரிசு வழங்க அனுமதியும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2021 – 2022 – ஆம் ஆண்டுக்கான பாரம்பரிய நெல் விளைச்சல் போட்டியினை நடத்த ஏதுவாக ரூ.2,25,000/-க்கு நிருவாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

(த.பி.பா)

4. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், வேளாண்மை இயக்குநர், 2021 – 2022-ஆம் ஆண்டிற்கான "பாரத ரத்னா எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் இரகங்கள் பாதுகாவலர்" விருதுக்கு முதல் மூன்று இடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் மகசூல் பற்றிய விவரங்களை பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

| தரம் | மாவட்டம் | விவசாயின் பெயர் மற்றும் முகவரி | நெல் இரகம் | மகசூல் / எக்டர் (கிலோவில்) |
|---|---|---|---|---|
| முதல் இடம் | நாமக்கல் | திரு.அ.ரங்கசாமி,<br>த/பெ.அல்லாளி,<br>எண். 6/14,<br>தோட்டமுடையான்பட்டி,<br>எருமப்பட்டி, நாமக்கல். | ஆத்தூர் கிச்சடி சம்பா. | 11,170 |
| 2-ஆம் இடம் | செங்கல்பட்டு | திரு. மு. சரவணன்,<br>த/பெ. முத்துக்கிருஷ்ணன்,<br>போலச்சேரி,<br>திருப்போரூர்,செங்கல்பட்டு | தூயமல்லி | 9,496 |
| 3-ஆம் இடம் | ஈரோடு | திரு. கி. மூர்த்தி,<br>த/பெ. கிருஷ்ணகவுண்டர்,<br>காடப்பநல்லூர், ஈரோடு | தங்க சம்பா | 7,225 |

மேலும், மேற்குறிப்பிட்ட மூன்று விவசாயிகளுக்கு முறையே ரூ.1,00,000/- இலட்சம், ரூ.75,000/- மற்றும் ரூ.50,000/- பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களை, 2022 – 2023 – ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறை சார்பில் நடைபெறும் ஏதேனும் ஒரு விழாவில் வழங்குவதற்கு ஆணை வழங்குமாறும், பரிசுத்தொகையான ரூ.2,25,000/- மற்றும் பயண செலவினத்திற்கான ரூ.5000 ஆக மொத்தம் ரூ.2,30,000/-க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும், மேற்படி பரிசினை வழங்குவதற்கு வேளாண்மை இயக்குநர் அவர்களை மதிப்பீட்டு கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக நியமிக்குமாறும் வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

5. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன்ஆய்வு செய்து, 2021-2022-ஆம் ஆண்டிற்கான "பாரத ரத்னா எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் இரகங்கள் பாதுகாவலர் விருதுக்கு, அதிக மகசூல் பெற்று, மாநில அளவில் முதல் மூன்று இடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்க்காணும் விவசாயிகளுக்கு முறையே ரூ.1,00,000, ரூ.75,000, ரூ.50,000 பரிசு தொகை மற்றும் சான்றிதழ்களை 2022-2023-ஆம் ஆண்டில் துறை சார்பில் நடைபெறும் ஏதேனும் ஒரு விழாவில் வழங்குவதற்கு அனுமதியும், அதற்கு தேவைப்படும் ரூ.2,25,000-க்கு நிதி ஒப்பளிப்பும், வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(த.பி.பா)

| தரம் | மாவட்டம் | விவசாயின் பெயர் மற்றும் முகவரி | நெல் இரகம் | மகசூல் / எக்டர் (கிலோவில்) |
|---|---|---|---|---|
| முதல் இடம் | நாமக்கல் | திரு.அரங்கசாமி,<br>த/பெ.அல்லாளி,<br>எண். 6/14,<br>தோட்டமுடையான்பட்டி,<br>எருமப்பட்டி, நாமக்கல். | ஆத்தூர் கிச்சடி சம்பா. | 11,170 |
| 2-ஆம் இடம் | செங்கல்பட்டு | திரு. மு. சரவணன்,<br>த/பெ. முத்துக்கிருஷ்ணன்,<br>போலச்சேரி,<br>திருப்போரூர்,செங்கல்பட்டு | தூயமல்லி | 9,496 |
| 3–ஆம் இடம் | ஈரோடு | திரு. கி. மூர்த்தி,<br>த/பெ. கிருஷ்ணகவுண்டர்,<br>காடப்பநல்லூர், ஈரோடு | தங்க சம்பா | 7,225 |

6. மேலே பத்தி – 5 - இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தினை கீழ்க்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2401 – 00 - பயிர் வளர்ப்பு - 102 – உணவு தானியப் பயிர்கள் மாநிலச் செலவினங்கள் – JD – பயிர் விளைச்சல் போட்டி 359 – பரிசுகளும் வெகுமதிகளும் – 01 பரிசுகளும் வெகுமதிகளும்

IFHRMS DPC : 2401-00-102-JD-35901

7. மேலே பத்தி - 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ளவும், மதிப்பீட்டு கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக செயல்படவும் வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு. எண்.998301/நிதி (வே&உ.ந) துறை /நாள் 07.12.2022 பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>

வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
மாநில முதன்மைக் கணக்காயர் (G&SSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை-9.

(த.பி.பா)

<u>நகல்:-</u>

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளரின் தனிச்செயலர்,
வேளாண்மை - உழவர் நலத் துறை, சென்னை-9.
வேளாண்மை - உழவர் நலத் (பொது/வ&தி) துறை, சென்னை-9.
நிதித் (வே&உ-ந / வரவு செலவு) துறை, சென்னை-9.
வேளாண்மை - உழவர் நலத் (அநமு3) துறை, சென்னை-9. (2 நகல்கள்)
உதவி நிரலர், வேளாண்மை - உழவர் நலத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

வ. சசிகுமார் 2/1/2023
பிரிவு அலுவலர்
02.01.23